# 14 அன்பு

இறையாட்சியின் முக்கிய குணவியல்புகளில் ஒன்று அன்பாகும். கடவுள் ஒரே குமாரனை இவ்வுலகத்திற்கு தந்தருளி நம்மில் அன்பு கூர்ந்தார். இயேசு தம் திருப்பணியை ஆரம்பித்தது முதல் சிலுவையில் மரணமடையும் வரை தன்னலமற்ற அன்பை பிறர் மேல் செலுத்தினார்.


திருச்சட்ட அறிஞர் ஒருவர் இயேசுவிடம் "நிலை வாழ்வை உரிமையாக்க செய்ய வேண்டியது என்ன?" என்று தொடுத்த கேள்விக்கு , இயேசு பின்வரும்' அன்பின் வேத வாக்கியத்தை கூறினார்.

" உன் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனதோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூறுவாயாக.

உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக"

லூக்கா 10:27

அன்பு மையமான வாழ்க்கை முறைக்கு இணைந்து செயல் பட வேண்டியவர் மூவர் என இயேசு காட்டுகிறார்.



## நமக்கு அடுத்திருப்பவர் (பிறர்)



**வாசிப்போம் லூக்கா 10: 25–37**

ஒருவர் எருசலேமிலிருந்து எரிகோவிற்கு போகும் போது . . .






கள்வர் கையில் அகப்பட்டார். கள்வர் அவருடைய ஆடைகளை உரிந்து கொண்டு. . .


அடித்துக்குற்றுயிராக விட்டுப் போனார்கள்.






குரு ஒருவர் தற்செயலாக அவ்வழியே வந்தார். உதவி செய்யாது மறுபக்கம் விலகிச் சென்றார்.

பின்னர் லேவியர் ஒருவர் வந்தார். அவரும் உதவி செய்யாது சென்றார்.





அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியர் அவரின் மீது பரிவு கொண்டு, . .

காயங்களில் திராட்சை மதுவும், எண்ணெயும் வார்த்து காயம் கட்டினார்,





தான் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி ஒரு சாவடிக்குக் கொண்டுபோய், . .



சாவடி பொறுப்பாளரிடம் இரு தெனாரியத்தைக் கொடுத்து கவனிக்கும்படி கூறினார்.



மேலதிகம் செலவானால் திரும்பி வரும்போது தருவேன் என்றார்.



குருவும், லேவியரும் குற்றுயிராக இருந்த மனிதனுக்கு உதவிசெய்வதன் மூலம் தமக்கு ஏற்படும் விளைவைப் பற்றி சுயநலமாகச் சிந்தித்து, உதவ முன்வரவில்லை. ஆனால் சமாரியனோ காயப்பட்டவனுக்கு, உதவிசெய்யாவிடில் அவருக்கு ஏற்படும் விளைவை சிந்தித்து, அவருக்கு உதவினார்.


**அன்பு**

- தேவையிலிருப்போருக்கு சுயநலமின்றி உதவிசெய்ய முன்வரும்
- தன்னலமற்றோரின் நற்பண்பு
- தனக்கு இழப்பு வந்தாலும் துன்பப்படுவோருக்கு உதவும்.

**நம் அயலவர்**

- தேவையுள்ளோர் அனைவரும்
- இரக்கம் காட்டுபவர் யாவரும்

| நல்ல சமாரியனின் செயல்கள் | நீரும் நல்ல சமாரியன் போன்று செயல்படுவீரா? |
|---|---|
| தான் சென்றுகொண்டிருந்த பயணத்தை விடுத்து. தேவையிலிருந்தவருக்கு உதவிசெய்தார், | உமது செயல்பாடுகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகளை மற்றவர்களின் தேவையை பூர்த்திசெய்யும் பொருட்டு தியாகஞ் செய்வீரா? |
| திராட்சை மதுவும், எண்ணெயும் வார்த்து காயம் கட்டி, தன் சொந்த கழுதையில் ஏற்றிச் சென்றார். | உமது சொந்த தேவை, சுகபோகத்திற்காக வைத்திருக்கும் பொருட்களை தேவையுள்ளவர்களுக்குக் கொடுத்து உதவ முன்வருவீரா? |
| சாவடியில் சேர்த்து, பராமரிப்பதற்கு பணம் கொடுத்ததுடன் மேலதிக செலவுகளை திரும்பி வரும்போது செலுத்துவதாக கூறினார். | பிறரின் தேவைகளைச் சந்திக்க, உமக்கு ஏற்படும் நேரம், பணச்செலவு, சிரமம் ஆகியவற்றை பொருட்படுத்தாது உதவுவீரா? |
| காயமுற்றவர் புற இனத்தவராக இருந்தாலும், உதவி செய்தார். | சாதி, மதம், இனம் நிற வேறுபாடுகளை கருத்தில் கொள்ளாது யாவருக்கும் உதவுவீரா? |
| காயப்பட்டவரிடமிருந்து பிரதிபலன் எதையும் எதிர்பார்க்காமல் உதவினார். | நீரும் பிரதிபலனை எதிர்பார்க்காமல், தேவையுள்ளோருக்கு அன்பின் செயல்களைப் புரிவீரா? |





## பகைவரிடம் அன்பு காட்டல்

**வாசிப்போம்**

**லூக்கா 6: 27 — 36**

இயேசு கூறினார்

உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள். உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள். உங்களை சபிப்போருக்கு ஆசி கூறுங்கள். உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்.

உங்கள் மேலுடையை எடுத்துக் கொள்பவர் உங்கள் அங்கியையும் எடுத்துக்கொள்ளப்பார்த்தால் அவரைத் தடுக்காதீர்கள்.

உங்களிடம் கேட்கும் எவருக்கும் கொடுங்கள்.

உங்களுடைய பொருட்களை எடுத்துக்கொள்வோரிடமிருந்து திருப்பிக் கேட்காதீர்கள்.

பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்.

மனனம் செய்வோம். லூக்கா 6:36

“ உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல, நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்.”



இயேசு பகைவரிடம் அன்பு காட்ட வேண்டும் என்று கற்பித்தது மாத்திரமல்ல அதனைச் செயலிலும் காட்டி, முன்மாதிரியை வைத்துள்ளார்.



- சிலுவையிலிருந்து, தன்னைக் குத்தியவர்களுக்காக “பிதாவே, மன்னியும்” எனக் கேட்டார்.
- கெத்சமனே தோட்டத்தில் அவரைப் பிடிப்பதற்காக வந்த தலைமைக்குருவின் பணியாளரின் காதைத் தொட்டு சுகமாக்கினார்.

நாமும், நமது பகைவரிடம் அன்பு செலுத்துவதன் மூலம், கடவுளின் ஆட்சியை, நாம் வாழும் இடங்களிலேயே உருவாக்கலாம்.

## அன்பு செலுத்தப்படாமையால் ஏற்படும் விளைவு




இப்படிப்பட்ட பத்திரிகைச் செய்திகளை நீங்கள் வாசித்திருக்கிறீர்களா? இவற்றிற்கான காரணங்கள் என்ன? இன்று தன்னலமற்ற அன்பு முழுமையாகக் காட்டப்படாமையால், தனிநபர், குடும்பம், சமூகம் ஏன் நாடுகளுக்கிடையே கூட துன்பமும் விரக்தியும் ஏற்பட்டுள்ளது. தன்னில் தானே அன்பு செலுத்தாதவர், சிறிய பிரச்சனையைக் கூட முகம் கொடுக்க முடியாது வாழ்வை வெறுக்கின்றனர்.

நாம் அன்பு செலுத்துவதன் மூலம் நம் வாழ்விலும் பிறர் வாழ்விலும் சமூக வாழ்விலும் இறை ஆட்சியை உருவாக்குவோம்.

## நாம் கற்றுக்கொள்பவை

- இறையாட்சியில் முக்கிய விழுமியம் அன்பு
- அன்பு பகைவரிடமும் செலுத்தப்பட வேண்டும்.
- அன்பு தேவை இருப்போருக்கு உதவும்.
- அன்பு செலுத்தாமல் வாழ்வதால் மனுக்குலம் துன்புறுகிறது. சுயநலம் வளர்கின்றது.
- அன்பின் அடிப்படையில் நாம் வாழ வேண்டும்.

## செயற்பாடு

1. "அன்புள்ளோர் என்றும் பிறர்க்குரியவர்" என்ற முதுமொழியின் பின்னணியில் இயேசுவின் வாழ்க்கைப் பண்புகளை ஆராய்ந்து கட்டுரை வரைக.

2. "பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" லூக்கா 6:31 பின்வரும் அட்டவணையை இத் திருமறைப்பகுதியின் அடிப்படையில் பூர்த்தியாக்குக.

| பிறர் எனக்குச் செய்ய வேண்டும் என நான் விரும்புவது. | நான் என் அயலவருக்கு இவற்றைச் செய்த சந்தர்ப்பம். |
|---|---|
| | |
| | |
| | |

3. நீர் உமது குடும்பத்துடன் அல்லது நண்பர்களுடன், தேவையில் இருப்போருக்கு இரக்கம் காட்டிய சந்தர்ப்பத்தை உமது வகுப்பில் ஏனைய மாணவர்களுடன் பகிர்ந்துகொள்க.